*1994 நவம்பர் 7*] [பேரவைத் தலைவர்]

இப்போது இங்கே தனிப்பட்ட ஒரு பிரச்சினையை எழுப்புவதற்கு திருமதி. பொன்னம்மாள் அவர்கள் என்னிடத்திலே அனுமதி கேட்டார்கள், ஆனால், அதற்கு அனுமதி மறுத்து இருந்தேன். மறுத்ததை மீறி அவர்கள் பேசத் துவங்கிய நேரத்திலேயும், எதிர்க் கட்சித் தலைவர் வெளிநடப்புச் செய்யப் போவதாகச் சொல்லிய நேரத்திலேயும் அவர் பேசிய எதுவும் அவைக் குறிப்பில் இருக்காது.

## 3. சிறப்புக் கவன ஈர்ப்பு

**அண்மையில் புயல் பெருமழையால் சேதம் ஏற்பட்டுள்ளது குறித்தும் நிவாரண நடவடிக்கைகள் எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்தும்**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சில தினங்களுக்கு முன்னர் தமிழகத்தில் ஏற்பட்ட புயல், பெய்த பெரு மழை காரணமாக ஏற்பட்டுள்ள சேதம் மற்றும் அரசாங்கம் எடுத்துள்ள நிவாரண நடவடிக்கைகள் பற்றிய பிரச்சினை குறித்து அவையில் எழுப்ப வேண்டும் என்று சில மாண்புமிகு உறுப்பினர்கள் என்னிடத்தில் அறிவிப்புக் கொடுத்து இருந்தார்கள். அந்த அறிவிப்பை ஏற்றுக்கொண்டு அவர்களை அதுபற்றி இங்கே எழுப்பலாம் என்று அனுமதி அளித்து இருந்தேன். அவர்கள் இங்கே எழுப்பலாம். திரு. சி. ஞானசேகரன்; அவர் இப்போதுதான் வெளியே போகிறார். திரு. பலராமன், திரு. அ. செல்வராசன், டாக்டர் குமாரதாஸ் அவையில் இல்லை. இதே பொருள்பற்றி பேரவையில் எழுப்புவதற்கு 55-வது விதியின் கீழ் அனுமதி கேட்டு இருந்த திரு. தாமரைக்கனி.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் சமீபத்தில் பெய்த புயலாலும், மழையாலும் ஆயிரக்கணக்கான குடிசைகளும், பொருட்களும் சேதமடைந்தன. ஆனால், தமிழ்நாடு அரசு தன்னால் இயன்ற அளவுக்கு மக்களுக்கு அந்த வெள்ள நிவாரண வேலைகளைச் செய்தது. ஆனால், நமது தமிழ்நாட்டிலிருந்து வரிப் பணங்களை வாங்கிக்கொண்டு, அதிக அளவில் வரியை வாங்கிக்கொண்டு இருக்கின்ற மத்திய அரசு மாற்றான் தாய்ப் பிள்ளை போல், தமிழ்நாடு அரசுக்கு மத்திய நிவாரண

உதவியோ, ஆந்திராவைப் போல நமக்கு வெள்ள நிவாரண நிதியோ கொடுக்கவில்லை. அதைக் கொடுப்பதற்கு தமிழக அரசு மத்திய அரசை வற்புறுத்துமா? அதுமட்டுமல்லாமல், இங்கே வீடு இழந்தவர்களுக்கு அரசு மூலம் வீடுகள் கட்டுவதற்கு லோன் கொடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 11-10*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்மையில் தமிழகத்தில் சென்ற திங்கள் 29, 30 மற்றும் 31 ஆம் தேதிகளில் மழை பெய்ததைப் பற்றி தமிழக அரசு உரிய காலத்தில் நடவடிக்கை எடுத்ததாலேயும், தொடர்ந்து நடவடிக்கை எடுத்ததாலேயும், சேதங்கள் குறைவாக இருக்கின்றன என்பதை நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். 31-ஆம் தேதி முதலமைச்சர் அவர்கள் தூத்துக்குடியில் இருக்கிறபோது, சென்னையிலும், சுற்றியுள்ள பகுதிகளிலும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டது என்றும், 100-லிருந்து 120 கிலோமீட்டர் வேகத்தில் புயல் அடித்தது என்றும் செய்தி அவர்களுக்குத் தெரிந்து, அங்கேயிருந்தே சென்னையில் இருக்கிற பல்வேறு அதிகாரிகளுக்கும் கட்டளையிட்டு, என்னென்ன செய்ய வேண்டும் என்று நடவடிக்கை எடுக்கப்பட்டது. அத்துடன் இதில் விரிவாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதால், அதிகாரிகள் மட்டும் நடவடிக்கை எடுத்தால் போதாது என்று, அமைச்சர்களும் நேரடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று முதலமைச்சர் அவர்கள் சென்னைக்கு வருகிறபோது, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர், போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. கே.ஏ. செங்கோட்டையன் அவர்கள், கைத்தறித் துறை அமைச்சர் திரு. மதுசூதனன் அவர்கள், பொதுப் பணித் துறை அமைச்சர் திரு. எஸ். கண்ணப்பன் அவர்கள், பிற்பட்டோர் நல அமைச்சர் திரு. டி. ஜெயகுமார் அவர்கள் மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் ஆகிய அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகளை, தான் வருகிற விமானத்திலேயே அழைத்து வந்து, விமானத்திலே வருகிறபோதே கூட என்னென்ன செய்ய வேண்டுமென்று--ஏனென்றால் இதில் காலதாமதம் செய்யக்கூடாது என்பதால், விமானத்தில் வருகிறபோதே என்னென்ன செய்ய வேண்டுமென்று—அவர்கள் ஆலோசனை செய்து உத்தரவிட்டார்கள். சம்பந்தப்பட்ட அமைச்சர்களும், மற்ற

*1994 நவம்பர் 7]* [திரு. எஸ். டி. சோமசுந்தரம்]

அமைச்சர்களும் பல்வேறு பகுதிகளுக்குச் சென்று அன்றே மக்களுடைய குறைகளைக் கேட்டு, அவர்களுக்கெல்லாம் உடனுக்குடன் பரிகாரங்கள் செய்யப்பட்டன. அதைப்போல ......

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: வெளிநடப்பு செய்த உறுப்பினர்கள் லாபியிலே இருந்து அவை நடவடிக்கைகளுக்குக் குந்தகம் ஏற்படுகிற வகையிலே உரத்த குரலில் பேசிக்கொண்டிருப்பது தவறு. அவ்வாறு லாபியிலே இருந்து குரல் எழுப்பிக் கொண்டிருக்கிறவர்கள் லாபியை விட்டு வெளியேற வேண்டுமென்று உத்தரவிடுகிறேன். மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைப்போல நடவடிக்கைகள் எல்லாம் மிக விரைவாக எடுக்கப்பட்டு வருகின்றன என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன். அவ்வப்போது முதலமைச்சர் அவர்களுடைய அலுவலகத்திலேயிருந்து அதிகாரிகளுக்கு எல்லாம் கட்டளைகள் பிறப்பிக்கப்படுகின்றன. அதுமட்டுமல்லாமல், பாதிக்கப்பட்டவர்களுக்கு எவ்வளவு உணவு வேண்டுமானாலும் கொடுக்க வேண்டுமென்று முதலமைச்சர் அவர்கள் அலுவலகத்திலேயிருந்து உத்தரவுகள் போய்க் கொண்டிருக்கின்றன என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த புயலால், வெள்ளத்தால் தமிழகத்தைப் பொறுத்தவரையில் 54 நபர்கள் உயிர் இழந்திருக்கிறார்கள். அதை மாவட்ட வாரியாக நான் படிப்பது என்றால் நேரம் அதிகமாகும். எனவே, காலம் கருதி, 54 நபர்கள் உயிர் இழந்திருக்கிறார்கள் என்பதைச் சொல்லி, அதில் 53 பேர்களுக்கு முதலமைச்சர் அவர்களுடைய நிவாரண நிதியிலிருந்து பத்தாயிரம் ரூபாய் கொடுக்கப்பட்டது என்றும், ஒரு நபருடைய வாரிசு யார் என்று தெரியாததால் கொடுக்கப்படவில்லை என்றும் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பாதிக்கப்பட்ட மொத்த குடிசைகள் இதுவரையில் 32,692. அவைகளுக்கெல்லாம் ஒரு கோடியே எட்டு இலட்சத்து 19 ஆயிரம் ரூபாய் பணம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதைப்போல சென்னையைப் பொறுத்த வரையில் 20 இடங்களில் அவர்கள் எல்லாம் தங்க வைக்கப்பட்டனர். செங்கல்பட்டு மாவட்டத்தைப் பொறுத்தவரையில் 8 இடங்களில் தங்க வைக்கப்பட்டது. அவர்களுக்குப் பணம் மட்டுமல்லாமல், சென்னையைப் பொறுத்தவரையில் முழுமையாக பாதிக்கப்பட்டவர்களுக்கு 600 ரூபாயும், பாதியாக பாதிக்கப்பட்டவர்களுக்கு 300 ரூபாயும், 5 கிலோ அரிசியும், ஒரு

வேஷ்டியும், ஒரு சேலையும், ஒரு லிட்டர் மண்ணெண்ணெயும் கொடுக்கப்பட்டு இருக்கிறது.

முற்பகல் 11-15

அதேபோல், மற்றவிதமான சேதங்களைச் சொல்ல வேண்டும் என்றால், பேருந்துச் சாலைகள் 26 கிலோ மீட்டரும், உட்சாலைகள் 69 கிலோ மீட்டரும், மைய வடிகால் பகுதியில் கட்டிடங்கள் பத்தும், பாலங்கள் 22-ம், தெருவிளக்குகள் 300-ம், தெருவிளக்குக் கம்பங்கள் 115-ம் சேதம் அடைந்திருக்கின்றன.

அதேபோல், மின்சாரத் தட்டுப்பாடு ஏற்பட்டபோது, முதலமைச்சருடைய உத்தரவின்பேரில் எழும்பூரிலிருந்து தாம்பரம் வரையிலும் பேருந்து மூலமாக மக்கள் செல்வதற்கு, அன்றைக்கு சௌகரியங்கள் செய்யப்பட்டன. மழையால், வெள்ளத்தால் மரங்கள் கீழே விழுவதால், போக்குவரத்து பாதிக்கப்படுகிறது. மின்சாரக் கம்பிகள் அறுபட்டு விடுகின்றன. உடனுக்குடன், இதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டதன் காரணத்தால், தமிழகத்தைப் பொறுத்தவரையிலும், போக்குவரத்து தடையில்லாமல், மக்களுடைய அன்றாட வாழ்க்கை தடைபடாத வகையில் நிலைமைகள் சீரமைக்கப்பட்டு, மக்களுடைய வாழ்க்கை சகஜநிலையில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது என்பதை நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

அதேபோல், குளங்கள், மதகுகள், ஏரிகள் உடைபட்டு இருக்கின்றன. இன்றைக்குத் தமிழகத்தைப் பொறுத்தவரையில், எல்லா அணைக்கட்டுகளிலும் தேவையான தண்ணீர் இருக்கிறது. எந்த அளவு தண்ணீர் உள்ளே வருகிறதோ அந்த அளவு தண்ணீரை வெளியே விடவேண்டும் என்று இன்றைக்கு வெளியே விட்டுக்கொண்டிருக்கிறோம். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுடைய மாவட்டத்தைப் பற்றிச் சொல்லவேண்டும் என்றால், 7-ம் தேதி மட்டும்--இன்றைக்கு வைகைக்கு வருகிற தண்ணீர் 5,254 கன அடி, ஒரு வினாடிக்கு. அதிலே 3 ஆயிரம் கன அடி தண்ணீரை ஒரு வினாடிக்கு வெளியே விட்டுக் கொண்டிருக்கிறோம்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமரைக்கனி அவர்கள் மத்திய அரசிடம் ஏதாவது கேட்டீர்களா என்று கேட்டார்கள். முதல் அறிக்கையாக 4-11-1994 அன்று 33.22 கோடி ரூபாய் அளவுக்கு சேதம் ஏற்பட்டிருக்கிறது என்றும், இரண்டாவது அறிக்கையாக 5-11-1994 அன்று 28 கோடி ரூபாய்க்கு மேலும் சேதம் ஏற்பட்டிருக்கிறது என்றும், ஆக மொத்தம் 61.22 கோடி ரூபாய்க்குச் சேதம் ஏற்பட்டிருக்கிறது

1994 நவம்பர் 7] [திரு. எஸ். டி. சோமசுந்தரம்]

என்றும், மைய அரசுக்கு விளக்கமாக 2 அறிக்கைகள் அனுப்பப்பட்டு இருக்கின்றன. அதேபோல், பயிர்கள் எவ்வளவு சேதம் அடைந்திருக்கின்றன, ரோடுகள் எவ்வளவு சேதம் அடைந்திருக்கின்றன என்பதைப் பற்றி எல்லாம் விளக்கமாக மைய அரசுக்கு அறிக்கைகள் அனுப்பி வைக்கப்பட்டு இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## 4. அறிக்கை அளித்தல்.

பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குழுக்களின் அறிக்கைகளை அளித்தல். பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திருமதி ஜீனத் சர்புதீன், பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் தலைவர்.

**திருமதி ஜீனத் சர்புதீன்:** மாண்புமிகு சட்டப் பேரவையினுடைய தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைமுன், 1994-95-ஆம் ஆண்டிற்கான பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் (பத்தாவது சட்ட மன்றப் பேரவை) 46 முதல் 48 வரையிலான அறிக்கைகளை குழுவின் சார்பாக பேரவைக்கு அளிக்கிறேன்.

## 5. மின்வாரிய நிதிநிலை அறிக்கை, 1994-95 மற்றும் திருத்திய மதிப்பீடுகள், 1993-94 மீது விவாதம்--தொடர்ச்சி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தமிழ்நாடு மின்சார வாரியத்தின் நிதிநிலை அறிக்கையின் மீது விவாதம் தொடர்ச்சி. சென்ற வெள்ளிக்கிழமை அன்று பேசி, பாதியில் பேச்சை நிறுத்தியிருந்த திருமதி ஜீனத் சர்புதீன் அவர்கள் இன்றைக்குத் தொடருவார்கள்.

**திருமதி ஜீனத் சர்புதீன்:** மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்களே, மின்துறை மீதான விவாதத்தில், சென்ற வெள்ளிக்கிழமை நான் பேசிய பேச்சின் தொடர்ச்சியாக இன்று பேச அனுமதித்ததற்காக, என்னுடைய நன்றியினையும், பாராட்டையும், வணக்கத்தையும் தங்களுக்குக் காணிக்கையாக்குகின்றேன்.